**ஜூலை – 29**

# TNPSC துளிகள்

- புது டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தைப் போன்று மும்பையிலும் ஒரு தமிழ்நாடு இல்லம் மற்றும் கலாச்சார மையத்தினை தமிழக அரசு நிறுவ உள்ளது.
- டேவிஸ் கோப்பை போட்டித் தொடரில் பங்கேற்பதற்காக இந்திய டென்னிஸ் அணியானது கடந்த 55 ஆண்டுகளில் முதன்முறையாக பாகிஸ்தான் செல்ல உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

- தமிழக அரசானது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியை 2.5 கோடியிலிருந்து 3 கோடியாக உயர்த்தியுள்ளது.
- அரசானது இந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை இரண்டு ஆண்டுகளுக்குள் இரண்டாவது முறையாக உயர்த்தியுள்ளது.
- கடைசியாக 2018 ஆம் ஆண்டு ஜனவரியில் திருத்தம் செய்யப்பட்டது.

***கூடுதல் தகவல்***

- மாநில அரசால் முழுவதும் நிதியளிக்கப்படும் இத்திட்டத்திற்கு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களது தொகுதியில் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகளை அடையாளம் கண்டு முன்மொழிகின்றனர்.
- இந்தத் திட்டமானது கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் செயல்படுத்தப் படுகின்றது.
- இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்வாக அனுமதியளித்து அதனைச் செயல்படுத்தும் நிறுவனங்களையும் அடையாளம் காண்பார்.

## தண்ணீருக்கு அழையுங்கள் 2.0 திட்டம்

- சென்னைப் பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வாரியமானது தண்ணீருக்கு அழையுங்கள் 2.0 எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதன்மூலம் நுகர்வோர் முன்பதிவு செய்ததிலிருந்து 2 நாட்களுக்குள் நீர் கிடைக்கப் பெறுவர்.
- மேலும் இத்திட்டத்தின் கீழ் உறுதியளிக்கப்பட்ட தேதியில் நிச்சயமாக நீர் வழங்கலைப் பெறுவர்.
- சென்னை மெட்ரோ தண்ணீர் லாரிகள் நாளொன்றிற்கு நகரம் முழுவதும் நீர் விநியோகத்திற்கென 12000 பயணங்களை மேற்கொள்கின்றன. இவற்றில் 2500 பயணங்கள் தண்ணீருக்கு அழையுங்கள் திட்டத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றன.

**Water on call**




PHOTO: B.VELANKANNI RAJ

| Capacity of tanker | Booking pattern | Booking time | Payment details (In ₹) |
|---|---|---|---|
| 3 KL | Over phone | 9.00 a.m. to 6.00 p.m. | 400 |
| | Online payment | 6.00 a.m. to 6.00 p.m. | |
| 6 KL | Online payment | 8.00 a.m. to 6.00 p.m. | 475 |
| 9 KL | | 10.00 a.m. to 6.00 p.m. | 700 |
| 12 KL | | 12.00 noon to 6.00 p.m. | 900 |
| 16 KL | | 12.00 noon to 6.00 p.m. | 1,200 |

# தேசியச் செய்திகள்

## அனைத்திந்திய காவல்துறை சந்திப்பு

- அனைத்திந்திய காவல்துறை சந்திப்பின் 62-வது பதிப்பு உத்திரப் பிரதேசத்தின் லக்னோவில் ஜூலை 16 முதல் 20 ஆம் தேதி வரை நடத்தப் பட்டது.
- இந்தச் சந்திப்பானது, இந்தியாவில் உள்ள காவல் துறையினரின் பணிசார் நிபுணத்துவத்தின் தரநிலையை உயர்த்துவதற்காக புதுடெல்லியின் அனைத்திந்திய காவல்துறை விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் வருடந்தோறும் நடத்தப்படுகின்றது.




- மகாராஷ்டிரா காவல்துறை அணியானது முதன்முறையாக ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் டிராபியை வென்றது.

## தேசிய டிஜிட்டல் சுகாதார செயல்திட்ட அறிக்கை

- சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகமானது பல்வேறுப் பங்காளர்களிடமிருந்து உள்ளீடுகளைப் பெறுவதற்காக தேசிய டிஜிட்டல் சுகாதார செயல்திட்ட அறிக்கையை பொது தளத்தில் வெளியிட்டுள்ளது.
- இது டிஜிட்டல் இந்தியா திட்டத்தை வலுப்படுத்துவதோடு அனைவரையும் உள்ளடக்கிய சுகாதார திட்டத்திற்கான முயற்சிகளையும் துரிதப்படுத்தும்.

**KEY GOALS**

- Establishing and managing the core digital health data and the infrastructure required for its seamless exchange.
- Promoting the adoption of open standards by all the actors in the national digital health eco-system, for developing several digital health systems that span across the sector from wellness to disease management.
- Creating a system of personal health records, based on international standards, and easily accessible to the citizens and the service providers, based on citizen-consent.
- Following the best principles of cooperative federalism while working with the states and union territories for the realisation of the vision.
- Promoting health data analytics and medical research; enhancing the efficiency and effectiveness of governance at all levels.
- Ensuring the quality of healthcare.
- Leveraging the information systems already existing in the health sector.

## ஃபாஸ்டேக் (FASTag) பாதைகள்

- தடையற்றப் போக்குவரத்தை உறுதி செய்வதற்கும், சுங்கச் சாவடிகளில் நெரிசலைத் தடுப்பதற்கும் தேசிய நெடுஞ்சாலைகளின் சுங்கச் சாவடிகளில் உள்ள அனைத்துப் பாதைகளையும். டிசம்பர் 01 முதல் ஃபாஸ்டேக் பாதைகளாக அறிவிக்க முடிவு செய்துள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- எனினும், ஒவ்வொரு சுங்கச் சாவடியிலும் அதிக அளவுடைய அல்லது பெரிய அளவுடைய வாகனங்களுக்கு ஏற்ற வசதிகளைச் செய்யவும் கண்காணிக்கவும் ஃபாஸ்டேக் மற்றும் இதர முறை கட்டண முறைகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு கலப்புப் பாதை அனுமதிக்கப்படும்.
- டிசம்பர் 01-க்குப் பிறகு, ஃபாஸ்டேக் வசதியைக் கொண்டிராத பயனர்கள் ஃபாஸ்டேக் முறையில் மட்டுமே வசூலிக்கப்படும் பாதைகள் வழியே சென்றால் அவர்களிடம் இரு மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும்.
- ஃபாஸ்டேக் என்பது முன்னரே பணம் செலுத்தி ஒரு அட்டையைப் பெற்றுக் கொண்டு அதன் பின்னர் ஒவ்வொரு முறையும் தானியங்கி முறையில் சுங்கக் கட்டணத்தைக் கழித்து கொள்ளும் ஒரு அடையாள அட்டை ஆகும். இது பணப் பரிவர்த்தனைகளுக்காக சுங்கச் சாவடியில் வாகனங்களை நிறுத்தாமல் செல்ல அனுமதிக்கிறது.




## கோச் மித்ரா செயலி

- கோச் மித்ரா செயலி மூலம் அளிக்கப்படும் பயணிகளின் குறைகளைத் தீர்ப்பதில் மோசமாக செயல்படும் இந்திய இரயில்வேயின் மூன்று மண்டலங்களில் தெற்கு ரயில்வேயும் ஒன்றாக உள்ளது.
- சிறப்பாக செயல்படும் முதல் ரயில்வேயாக கிழக்கு மண்டல ரயில்வேயும் அதனைத் தொடர்ந்து மேற்கு மத்திய ரயில்வேயும், கிழக்கு கடற்கரை ரயில்வேயும் உள்ளன.
- கோச் மித்ரா செயலியானது இரயில்களில் தூய்மை, குடிநீர் வழங்கல், துணிகளின் தரம் மற்றும் மின்கருவிகள் தொடர்பான குறைகளை தெரிவிக்க பயணிகளுக்கு உதவும் ஒரு ஒற்றைச் சாளர அமைப்பாகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## வங்கி சாரா நிதி நிறுவன ஒழுங்குமுறை

- 2019 ஆம் ஆண்டின் நிதி மசோதாவானது வங்கி சாராத நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்த ரிசர்வ் வங்கிக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- வங்கி சாராத நிதி நிறுவனங்களுக்கான மேற்பார்வை கட்டமைப்பானது பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளுக்கு இணையாக மாற்றப்படவுள்ளது.
- இதன் மூலம் ரிசர்வ் வங்கியானது எந்தவொரு வங்கி சாராத நிதி நிறுவனங்களின் கூட்டு நிறுவனத்திலும் ஆய்வு மற்றும் தணிக்கைகளை நடத்த இயலும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## திறன்மிகு வேளாண் ஹெலிகாப்டர்

- சென்னை ஐஐடியின் மாணவர்கள் வேளாண் நிலங்களில் விவசாயிகள் கைகளால் மருந்துகளைத் தெளிப்பதை ஒழிப்பதற்காக திறன்மிகு வேளாண் ஹெலிகாப்டரை உருவாக்கியுள்ளனர்.
- திறன்மிகு வேளாண் ஹெலிகாப்டரின் தற்போதைய பதிப்பானது 15 லிட்டர் பூச்சிக் கொல்லியை எடுத்துச் செல்லும் திறனுடைய ஒரு ஆளில்லா ஹெக்சாகாப்டர் ஆகும்.
- இது 100 சதவீத துல்லியத் தன்மையுடன் பூச்சிக் கொல்லி மருந்துகளை 10 மடங்கு வேகமாக கையால் தெளிப்பதற்கு ஆகும் அதே செலவில் தெளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆளில்லா விமானமானது 1-1.5 மீட்டர் உயரமுள்ள பயிர்களில் நன்றாக தெளிப்பை மேற்கொள்ளும்.



- பயிர் ஆரோக்கியத்தின் அடிப்படையில் விளைநிலங்களை வரைபடமிடலுக்கென பன்னிற புகைப்படக் கருவி பொருத்தப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது கடந்த ஜூன் மாதம் பம்பாய் ஐஐடியில் நடைபெற்ற இந்திய புத்தாக்க வளர்ச்சித் திட்ட பல்கலைக் கழகப் போட்டியிலும் வெற்றி பெற்றது.

# மாநிலச் செய்திகள்

## கர்நாடகாவின் புதிய முதல்வர்

- பாஜக கட்சிக்கு ஆட்சியமைக்க அழைப்பு விடுக்கப்பட்டதையடுத்து கடந்த 29 ஆம் தேதியன்று பி.எஸ் எடியூரப்பா 4-வது முறையாக கர்நாடகாவின் முதல்வராக பதவியேற்றார்.
- இவர் ஜூலை 29 அன்று சட்ட மன்றத்தில் நம்பிக்கை தீர்மானத்தின் மீது நடத்தப்பட்ட குரல் வாக்கெடுப்பில் தனது பெரும்பான்மையை நிரூபித்தார்.
- நான்காவது முறையாக கர்நாடகாவின் முதல்வராக பதவியேற்கும் இவர் தற்போதைய சட்டமன்றத்தில் பதவியேற்பது இரண்டாவது முறையாகும்.




- கர்நாடகாவில் நான்கு முறை முதல்வராக பதவியேற்ற ஒரே முதல்வர் இவரேயாவார்.
- முன்னதாக சட்டமன்றத் தேர்தலில் 104 சட்டமன்ற உறுப்பினர்களுடன் பாஜக தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்ததையடுத்து 2018 ஆம் ஆண்டு மே மாதம் முதல்வராக பதவியேற்றார்.
- ஆனால் சட்டப்பேரவையின் நம்பிக்கை வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இரண்டே நாட்களில் அவர் பதவி விலகினார்.
- இதனால் இவர் 2 ½ நாட்கள் மட்டுமே பதவியிலிருந்த இந்தியாவின் மிகக் குறுகியக் கால முதல்வர்களில் ஒருவரானார்.

## சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதி நீக்கம்

- கர்நாடக சட்டமன்ற சபாநாயகரான K.R. ரமேஷ்குமார் தற்போதைய சட்டமன்றத்தின் பதவிக் காலம் (2023) முடியும் வரை இடைத் தேர்தல்களில் போட்டியிட தடை விதித்து 14 அதிருப்தி உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்தார்.
- இவர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 13 பேரையும், JDS கட்சி உறுப்பினர்கள் மூவரையும் சுயேட்சை உறுப்பினர் ஒருவரையும் என ஒட்டு மொத்தமாக 17 பேரைத் தகுதி நீக்கம் செய்தார்.
- இதனால் 225 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் தகுதியுடையவர்களின் எண்ணிக்கை 208 ஆக குறைந்துள்ளது. எனவே பெரும்பான்மைக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை 105 ஆக உள்ளது.

- இந்த 17 உறுப்பினர்கள் இடைத் தேர்தலிலும் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது.
- இதனால் புதிய கர்நாடக முதல்வர் தனது அமைச்சரவையில் இந்த அதிருப்தி உறுப்பினர்களுக்கு இடமளிக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.




- இந்த தகுதி நீக்கங்கள் அனைத்தும் இந்திய அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணை மற்றும் 191வது சரத்துடன் இணைந்து செயல்படுத்தப் பட்டுள்ளது.
- தகுதி நீக்கம் காரணமாக தற்போதைய சட்டமன்ற காலம் முடியும் வரை இவர்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிடக் கூடாது என சபாநாயகர் அறிவித்திருந்தாலும் அதிருப்தி உறுப்பினர்கள் உயர் நீதிமன்றத்தில் அல்லது உச்ச நீதிமன்றத்தில் இந்த உத்தரவை எதிர்த்து வழக்குத் தொடர உள்ளனர்.

# விளையாட்டுச் செய்திகள்

## 2023 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி

- 2023 ஆம் ஆண்டின் ஐசிசி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரானது பிப்ரவரி 09 முதல் மார்ச் 26 வரை இந்தியாவில் நடைபெற உள்ளது.
- இது ஆண்கள் உலகப் கோப்பை கிரிக்கெட்டின் 13-வது பதிப்பாகும். மேலும் இந்தப் போட்டியை இந்தியா தனியாக நடத்துவது இதுவே முதன்முறையாகும்.
- இந்தியா ஏற்கனவே மூன்று முறை (1987, 1996, 2011) போட்டிகளை நடத்தியிருந்தாலும் ஒவ்வொரு முறையும் அதன் அண்டை - ஆசிய நாடுகளுடன் இணைந்தே நடத்தியது.
- ஒட்டு மொத்தமாக 5 முறை (1975, 1979, 1983, 1999 மற்றும் 2019) என அதிக முறை இங்கிலாந்து இப்போட்டியை நடத்தியுள்ளது.
- 1987 ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டி மட்டுமே இங்கிலாந்திலிருந்து விலகி இந்தியா மற்றும் பாகிஸ்தானில் நடத்தப்பட்ட முதல் பதிப்பாக உள்ளது.

| Year | Winners | Runners-up | Host Nation |
|---|---|---|---|
| 1975 | West Indies | Australia | England |
| 1979 | West Indies | Australia | England |
| 1983 | India | West Indies | England |
| 1987 | Australia | England | India & Pakistan |
| 1992 | Pakistan | England | Australia & New Zealand |
| 1996 | Sri Lanka | Australia | Pakistan & India |
| 1999 | Australia | Pakistan | England |
| 2003 | Australia | India | South Africa |
| 2007 | Australia | Sri Lanka | West Indies |
| 2011 | India | Sri Lanka | India & Bangladesh |
| 2015 | Australia | New Zealand | Australia & New Zealand |
| 2019 | England | New Zealand | England |
| 2023 | – | | India |

## பிரசிடென்ஸ் கோப்பை – மேரிகோம்

- இந்தோனேசியாவில் நடைபெற்ற 23-வது பிரசிடென்ஸ் கோப்பைக்கான போட்டியில் ஆறு முறை உலக சாம்பியன் வென்ற MC மேரி கோம் தங்கப் பதக்கம் வென்றார்.
- 51 கிலோ பிரிவில் போட்டியிட்ட இவர் ஆஸ்திரேலியாவின் ஏப்ரல் பிராங்ஸ்ஸை 5 - 0 என்ற கணக்கில் தோற்கடித்தார்.



# முக்கிய தினங்கள்

## உலக இயற்கை பாதுகாப்புத் தினம் – ஜூலை 28

- உலக இயற்கை பாதுகாப்புத் தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 28 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இயற்கை வளங்களைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இயற்கையைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து மக்களுக்குப் புரிதலை ஏற்படுத்துவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.




- - - - - - - - - - - - - - -